# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 246/மா/2025
நாள்14.05.2026

S. ஜெயசுதா
கோயம்புத்தூர் --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
திருப்பூர் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர், பெரியநாயக்கன் பாளையம், நாயக்கன் பாளையம், பாலமலை நகர், கதவு எண் 5/262–9, என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி S.ஜெயசுதா என்பவரின் 08.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.07.2025 அன்று பெறப்பட்டு 246/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர், பெரியநாயக்கன் பாளையம், நாயக்கன் பாளையம், பாலமலை நகர், கதவு எண் 5/262–9, என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி S.ஜெயசுதா என்பவர் 08.07.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"1) முறையீட்டு மனுதாரர் S. ஜெயசுதா, க/பெ சிவகுமார், வயது 45, ஆகிய நான் பணிந்து சமர்ப்பிக்கும் புகார் மனு விபரங்கள் பின்வருமாறு:–

2) திருப்பூர் மாநகராட்சியின் 3வது மண்டலத்திற்குட்பட்ட புதிய வார்டு எண் 44ல் கடந்த 2019ம் வருடம் ஆவண எண் 3366/2019 ஆக எனது தாயாரும், எனது சகோதரியும் பாக பாத்திய விடுதலை பத்திரமாக சார் பதிவகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ள 22 ஆண்டுகள் பழைமையான $522^3/_4$ சதுரடி கட்டிடம் எனது அனுபோகத்தில் உள்ளது. அதன் சொத்து வரி விதிப்பு எண் புதியது 032/044/903546, பழைய எண் 032/45062493 ஆகும்.

3) கடந்த 2017ம் ஆண்டில் ஓர் ஆண்டிற்கு சொத்துவரி மற்றும் SUC கட்டணம் என ரூ.360/– ஆக எனது தாயார் (லேட்) சாவித்திரி பெயரிலேயே செலுத்தப்பட்டு வந்த நிலையில் 2018–ல் தமிழக அரசின் சொத்துவரி பொதுச் சீராய்வு உத்தரவு என உயர்த்தப்பட்டு ரூ.15,819/– ஆக எதிர்மனுதாரர் உத்தரவிற்கேற்ப ஆட்சேபனையுடன் செலுத்தப்பட்டது. பின்னர் தமிழக அரசு அவ்வுத்திரவை விலக்கிக் கொண்டதால் மீளவும் பழைய சொத்துவரியே வசூலிக்க உத்தரவிடப்பட்டது. ஆனால் எனது சொத்து வரித் தொகையை ஆண்டிற்கு ரூ.870/– எனவும், 2019 முதல் 2021 வரை ஓர் ஆண்டிற்கு ரூ.1,140/– எனவும் எதிர்மனுதாரரால் உயர்த்தப்பட்டு, கடந்த 2018ல் செலுத்திய தொகை ரூ.15,819/–ல் பிடித்தம் செய்து வரவு வைக்கப்பட்டது. வரி வசூல் மையத்தில் கழிக்கப்பட்டதாக கூறி அவ்வாண்டுகளுக்கான ரசீது ஏதும் கொடுக்கப்படவில்லை.

4) கடந்த 2022ம் வருடத்தில் மாநகராட்சி நிர்வாகத்தால் எனது கட்டிடத்தின் முன்பகுதியில் அகலமான கழிவு நீர் வாய்க்கால் அமைக்கப்பட்ட போது பெரும் சேதமடைந்ததுடன் மிகவும் சிதிலமடைந்து யாருக்கும் வாடகை தரவியலாது மிகவும் சிரமப்பட்டேன். கொரோனா பெருந்தொற்றாலும் பெரும் பொருளாதார பாதிப்படைந்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எனது கட்டிடம் காலியாகவே இருந்தது. பின்னர் மிகவும் சிரமம் மேற்கொண்டு வாசல் பகுதியில் மராமத்து பணிகள் செய்து வெள்ளையடித்து தற்போது வாடகைக்கு விட்டுள்ளேன். இருப்பினும் எனது சொத்துவரியினை தவறாது செலுத்தி வந்துள்ளேன்.

5) பின்னர் 2025ம் ஆண்டு ஜனவரி 3ல் மண்டல வருவாய் உதவியாளர் பிரபாகர் என்பவர் (கைபேசி 99942 94709). எனது கணவர் சிவகுமாரின் கைபேசியில் தொடர்பு கொண்டு ரூ 40 ஆயிரம் கொண்டு வரும்படியும், வரி உயர்த்தப்பட்டுள்ளது எனவும் ஓரிரு முறை கூறியுள்ளார். சொத்து வரி உயர்வு குறித்த எந்தவொரு விசேட அறிவுப்புத்தாள் அல்லது கணக்கீட்டு படிவம் (work sheet) ஏதும் எனக்கு வழங்கப்படவில்லை. இதுவரை சொத்துவரி கணக்கு புத்தகமும் எதிர்மனுதாரரால் தரப்படவில்லை. பின்னர் எனது கணவரின் கைபேசிக்கு அதிக அளவில் சொத்துவரி நிலுவை உள்ளது என குறுஞ்செய்தி வந்ததையடுத்து, கடந்த 08.02.2025 அன்று வரி வசூல் மையத்திற்கு நேரில் சென்று மேற்படி விபரங்கள் அறிந்த போதுதான் எனக்கு மிகவும் பேரதிர்ச்சி ஏற்பட்டது. உடனடியாக இ–சேவை மையத்தில் எனது சொத்துவரி விபரங்களை பதிவிறக்கம் செய்து ஆய்வு மேற்கொண்டேன். அதில் எதிர்மனுதாரரின் கீழ் பணியாற்றும் ஊழியர்கள் தவறாகவும், முன்னுக்குப்பின் முரண்பாடாகவும் பிழையான கணக்கீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளதை என்னால் அறிய முடிந்தது.

6) எனது வணிகப்பயன்பாட்டு கட்டிடம் உள்ள முத்துசாமி வீதியில் உள்ள 50 கட்டிடங்களின் சொத்துவரி விதிப்பில் எந்த மாற்றமும் செய்யாத நிலையில், எனது கட்டிடத்தில் கூடுதல் கட்டிடமோ அல்லது எந்த மாறுதலும் மேற்கொள்ளாத நிலையில் சிதிலமடைந்ததை சீரமைத்து, வெள்ளை அடித்த எனது பழைமையான கட்டிடத்திற்கு, 1–ம் எதிர்மனுதாரர் கேட்ட பணத்தை நேரில் கொண்டு செல்லாது தவிர்த்ததால், இவ்வாறு வரம்புமீறி சொத்துவரியை பல மடங்கு உயர்த்தி வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளார். 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு சரியான வழிகாட்டலை வழங்கவில்லை என்பது புலனாகிறது. சொத்துவரி விதிக்கும் நடைமுறையை மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி வெளிப்படையான சூழலை 2ம் எதிர்மனுதாரர் ஏற்படுத்திட்டாரில்லை. திருப்பூர் மாநகராட்சியின் வலைத்தளத்தில் கட்டிட உரிமையாளர்களே சொத்துவரி கணக்கீடு செய்து கொள்ளும் வழிவகைகளை 2–ம் எதிர்மனுதாரர் இதுகாறும் பதிவேற்றம் செய்யவில்லை. கடந்த 2023–24ம் இரண்டாம் அரையாண்டிற்கு சொத்து வரி ரூ.11,941/– எனவும் அதை செலுத்தாத காரணத்தால் ரூ.500/– அபராத தொகை எனவும், கடந்த 2018ல் என்னிடமிருந்து முன்பணமாக பெற்ற தொகையும், கையிருப்பில் உள்ளதுமான ரூ 8,899/–ஐ வரவு வைத்து அவ்வாண்டின் மொத்த நிலுவைத் தொகை ரூ.3,639/– என்பதை பதிவிறக்கம் செய்த வலைத்தள ஆவணத்தின் மூலம் என்னால் அறிய முடிந்தது. அதிகாரிகளிடம் விளக்கம் கோரினால் சரிவர விளக்கம் அளிக்கவில்லை. மாமன்ற தீர்மானத்தின் பேரில் இதுபோன்ற சொத்துவரி உயர்வை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் பதிலளிக்கப்பட்ட போதிலும், உயர்த்தப்பட்ட எனது சொத்துவரியில் எவ்வித மாற்றமும் செய்யாது காலம் தாழ்த்தப்படுவதால் எனது அடிப்படை உரிமை மறுக்கப்பட்டு வருகிறது காலத்தில் எனது சொத்துவரியை செலுத்திடவியலாது உள்ளது. மேலும் கடந்த 27.05.2025ம் தேதிய நடப்பு நிதியாண்டு வரையிலான நிலுவைத்தொகை ரூ.53,545/– என திருப்பூர் மாநகராட்சியின் வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி எனக்கு பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இவையனைத்தும் திரைமறைவாகவும்,

டேபிள் கால்குலேசன் எனக் கூறப்படும் நிலைப்பாட்டின்படி உள் நோக்கத்துடனேயே இவ்வாறு 1–ம் எதிர்மனுதாரர் செயல்பட்டுள்ளார்.

7) இதுகுறித்து கடந்த 22.02.2025ம் தேதியில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் (2ம் எதிர்மனுதாரர்) மற்றும் திருப்பூர் மாநகராட்சி 3ம் மண்டல உதவி ஆணையாளர் அவர்களுக்கு பதிவுத்தபாலில் எனது புகார் மனுவினை அனுப்பியுள்ளேன். ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் எனது அம்மனுவிற்கு எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. தவறாக உயர்த்தப்பட்ட சொத்துவரியில் பிழை திருத்தம் போன்ற எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. நகராட்சிகள் நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக வலைத்தளத்தில் தவறாக பதிவேற்றம் செய்துள்ள எனது கட்டிட சொத்துவரியிலுள்ள பிழையில் திருத்தம் மேறகொள்ள, 2ம் எதிர்மனுதாரர் தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாகிறது.

8) எனவே, இந்த மோசடி குறித்து தாங்கள் தக்க விசாரணை மேற்கொண்டு 1–ம் எதிர்மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியும், எனது சொத்துவரியில் ஏற்படுத்திட்ட பிழையினை திருத்தி அமைத்திட வேண்டியும், இதனால் எனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு தக்க பரிகாரம் ஏற்படுத்தித் தர வேண்டியும் அல்லது கனம் நடுவர் அவர்கள் தக்கதென கருதும் இன்னபிற உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுமாய் பணிந்து பிராத்திக்கின்றேன்.''எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 16.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. எதிர்மனுதாரர் தரப்பில் திருப்பூர் மாநகராட்சி நிர்வாக அலுவலர் மற்றும் உதவி ஆணையாளர் (பொ), மண்டலம் 3 அவர்களின் 16.09.2025 நாளிட்ட, கடிதம் ந.க. எண் 3717/அ1/ம3/2025–ல் இணைத்தனுப்பியுள்ள திருப்பூர் மாநகராட்சி ஆணையாளரின் எழுத்துபூர்வமான ஆவணத்திலும் மற்றும் 05.01.2026 நாளிட்ட திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் சார்பாக சமர்ப்பித்துள்ள எழுத்துபூர்வமான ஆவணத்திலும் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது:–

''திருப்பூர் மாநகராட்சியின் மண்டலம் எண் 3, நல்லூர் மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண் 44, முத்துசாமி வீதி பகுதியில் தரை, முதல் தளம் கொண்ட RCC தரை பயன்பாட்டு கட்டிடமும், இரண்டாம் தளத்தில் சிமெண்ட் ஷீட் கூரை கட்டிடமும் நீண்ட நாட்களாக பயன்பாட்டில் இருந்து வந்தது.

மேற்படி கட்டிடத்திற்கான சொத்துவரி விதிப்பு எண் புதியது 032/044/903546 பழைய எண்.032/45062493 ஆகும். இவ்வரிவிதிப்பிற்கான அரையாண்டு வரி 2017–2018ல் அரையாண்டிற்கு ரூ.135/– ஆக இருந்து வந்தது.

2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கையின்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகள், மாநகராட்சிகளில் கட்டிடத்தின் பரப்பளவு, கட்டிடத்தின் தன்மை மற்றும் கட்டிடத்தின் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில், சொத்துவரி, வரி விதிப்பிலிருந்து தப்பிய இனமாக (Escaped Asst) இருந்தாலோ அல்லது கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் பகுதி வரி விதிப்புக்கு உட்படாமல் இருந்தாலோ வரிவிதிப்பில் உயர்வு (Enhancement of Assessment) செய்து வரி விதிப்புகள் செய்திட வழிகாட்டு சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டது.

3) மேற்படி சுற்றறிக்கையின் பேரில், மனுதாரர்/புகார்தாரரின் தரை, முதல் தளவணிக மற்றும் குடியிருப்பு பயன்பாட்டு கட்டிடம் மற்றும் இரண்டாம் தள சிமெண்ட் கூரை கொண்ட குடியிருப்பு கட்டிடத்திற்கு, நடைமுறையில் இருந்த திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவுகளின் கீழ் , வருவாய் பிரிவின் வருவாய் உதவியாளர், சிறப்பு வருவாய் ஆய்வர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் கொண்ட குழுவாக ஆய்வு செய்து 29.12.2017–ம்

தேதியன்று திருத்தி விதிக்கப்பட்ட இரண்டு வரி விதிப்புகள் மற்றும் அதற்குண்டான வருட வாடகை மதிப்பு, பழைய வரி, திருத்தி விதிக்கப்பட்ட வரி விதிப்பின் கூரை, பயன்பாடு கட்டிடத்தின் பரப்பளவு, திருத்தி விதிக்கப்பட்ட அரைவருட வரி ஆகிய விபரங்கள் பின்வருமாறு:–

| புதிய வரி விதிப்பு எண். | பழைய வரி விதிப்பு எண். | வரி விதிப்பாளர் பெயர் | பழைய ஆண்டு வாடகை மதிப்பு | பழைய அரை வருட வரி | திருத்திய ஆண்டு வாடகை மதிப்பு | திருத்திய அரை வருட வரி | பயன்பாடு மற்றும் பரப்பளவு |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 032/044/ 903546 | 032/045/ 03516 | G.சாவித்திரி க/பெ.கணேசன் | 5544 | 135 | 30030 | 5278 | 650 ச.அ வணிகம் |

மனுதாரர்/புகார்தாரர் திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குடியிருக்காத நிலையில் கோயம்புத்தூரில் குடியிருந்து வந்ததால், இச்சொத்திற்கான வரி விதிப்புகளின் அரைவருட வரி திருத்தி விதிக்கப்பட்டதன் விபரங்கள் அந்நாளில் பொறுப்பிலிருந்த வருவாய் உதவியாளர், சிறப்பு வருவாய் ஆய்வாளர் போன்ற களப் பணி அலுவலர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டதில், ஆட்சேபனையின்றி செலுத்தப்பட்டது. மனுதாரர் புகார் மனுவின் வாதுரையில் தெரிவித்துள்ளவாறு எழுத்து பூர்வ ஆட்சேபனைகள் ஏதும் அளிக்கப்படவில்லை.

4) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் **19.07.2018**ம் தேதிய **73**–ம் எண்ணிட்ட அரசாணையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சிகளில் சொத்துவரி பொது சீராய்வு செய்திட ஆணையிடப்பட்டது.

மேற்படி அரசாணையின்படி **01.04.2018** முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட பொது சொத்துவரி சீராய்வில் திருத்தி விதிக்கப்பட்ட வரி விதிப்புகளின் பேரில் புகார் மனுதாரர் வரியினை செலுத்தி வந்தார்.

இதற்கிடையே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் **19.11.2019**–ம் தேதிய **150**–ம் எண்ணிட்ட அரசாணையில், சொத்துவரி பொது சீராய்வினை ரத்து செய்து சொத்துவரி சீராய்வுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த வரியினை விதித்து வசூலித்து வரவும், சொத்து வரியினை சீராய்வு செய்வது குறித்து ஓர்குழு அமைத்தும் அரசினால் ஆணையிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக சொத்துவரி பொது சீராய்வுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த சொத்துவரிக்கு உயர்த்தப்பட்ட வரிவிதிப்புக்கான அரை வருட வரி திருத்தப்பட்டதுடன், புகார் மனுதாரர் / சொத்துதாரரால் சொத்துவரி திருத்தி விதிக்கப்படுவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த வரித்தொகைக்கு மிகையாக செலுத்தப்பட்டதனை, அடுத்தடுத்த அரையாண்டுகளுக்கு வரவாக்கப்பட்டது. இதுபோன்ற எதிர்கால அரையாண்டுக்குரிய வரி நிலுவைகளை முன்கூட்டியே வரவில் உள்ள தொகைகள் வரவு வைக்கப்பட்டதில், எவர் ஒருவருக்கும் ரசீது வழங்க மென்பொருளில் வடிவமைப்பு செய்யப்படாததால் ரசீது வழங்கப்படவில்லை.

5) புகார் மனுதாரரின் வாதுரையில் தெரிவிக்கப்பட்ட விவரங்களின்படி மாநகராட்சியால் சாலையின் வழியாக மழைநீர் கட்டுமான பணிகள் மேற்கொண்டதற்கும், மனுதாரர் கட்டிடத்தினை வாடகைக்கு தரவியலாது சிரமப்பட்டதற்கும் மாநகராட்சி நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்க இயலாது. கொரோனா பெருந்தொற்றாலும் பொருளாதார பாதிப்பு அடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதன் பேரிலும், இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தமது கட்டிடம் காலியாக இருந்து, தன்னால் சொத்துவரி செலுத்தப்பட்டு வந்ததாக தெரிவித்ததின் பேரிலும் நடைமுறையிலுள்ள சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு மாநகராட்சி நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்பதற்கு இல்லை.

01.04.2022 முதல் நடைமுறையிலிருந்த சொத்துவரி வரி விதிப்புகளுக்கான அரை வருட வரியினை அனைத்து மாநகராட்சிகளிலும், சிறப்பு வரி சீராய்வு செய்து உயர்த்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 30.03.2022ம் தேதிய 53–ம் எண்ணிட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, ஏற்கனவே நடைமுறையில் இருந்த அனைத்து சொத்துவரி விதிப்புகளுக்கும் 01.04.2022 முதல் சொத்து வரி திருத்தி விதிக்கப்பட்டது.

6) இதன் தொடர்ச்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கையின்படி, 2017–18ம் ஆண்டில் சொத்துவரி பொது சீராய்விற்கு முன்னர் மாநகராட்சியில் நடைமுறையில் உள்ள சொத்துவரி விதிப்புகளில், வரிவிதிப்பிலிருந்து தப்பிய இனங்கள் (Escaped from Assts) மற்றும் கூடுதலாக தளங்கள் அல்லது விரிவுபடுத்தி கட்டப்பட்டுள்ள தளங்களின் பகுதிகளுக்கான கட்டிடத்தின் பகுதியை வரிவிதிப்பில் சேர்த்து சொத்துவரி உயர்த்தி விதித்திட (Enhancement of Asst) வழிகாட்டு சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டது. மேலும், இச்சுற்றறிக்கையில் கட்டிடத்தின் பயன்பாட்டில் மாறுதல்கள், UTIS கணினி மென்பொருளில் கட்டிடத்தின் பரப்பளவில் ‘பூஜ்ஜியம்’ ஆக பதிவுகள் இடம் பெற்றிருப்பின் அம்மாதிரியான கட்டிடங்களை நேரில் ஆய்வு செய்து, குறையுள்ள வரிவிதிப்பு (Under Assts) வரிவிதிப்பிலிருந்து தப்பிய இனங்கள் (Escaped Assts) மற்றும் கட்டிடத்தின் பரப்பளவில் கூடுதல் செய்யப்பட்டிருந்தாலோ அல்லது கட்டிடத்தின் தளங்களில் கூடுதலாக கட்டி பயன்பாட்டிலிருந்தாலோ வரி உயர்வு செய்து வரி உயர்த்திடவும், பொது சரக்கு சேவைவரி பெறப்பட்ட குடியிருப்பு இனங்களிலும், குடியிருப்பு அல்லாத வணிக / தொழிற்கூட பயன்பாட்டில் மின் இணைப்பு / குடிநீர் இணைப்பு /பாதாள சாக்கடை இணைப்பு/தொழில் உரிம இனங்கள் பெறப்பட்டு இருப்பின் சொத்துவரி வரிவிதிப்பின் பயன்பாட்டினை மாற்றி வரிவிதிப்பு செய்திடவும், அனைத்து மாநகராட்சிகளுக்கும், தொழிற்கூட / வணிக பயன்பாட்டில் பெறப்பட்ட மின் இணைப்புகள், குடியிருப்பு விலாச விபரங்களுடன் பொது சரக்கு சேவை வரி வரிவிதிப்பு செய்யப்பட்டதன் தரவு விபரங்கள் வழங்கி கள ஆய்வு செய்து வருவாய் உயர்வினை செய்திட வழிகாட்டுதல்கள் தெரிவிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது மாநகராட்சிகளின் வருவாயினை பெருக்க வழங்கப்பட்ட மேற்படி சுற்றறிக்கையின் வழிகாட்டுதல்களின்படி புகார் மனுதாரரின் கட்டிடம் தரை, முதல் தள RCC கூரை வணிக பயன்பாடு, முதல் தளம் (குடியிருப்பு) இரண்டாம் தளம் (சிமெண்ட் ஷீட் கூரை குடியிருப்பு) கட்டிடமாக இருந்ததால் கட்டிடத்தினை மறு அளவீடு செய்து சொத்துவரி வரிவிதிப்பு எண் 032/044/903546–க்கான அரைவருட வரியினை முன் தேதியிட்டு உயர்த்தாமல் 2023–2024 இரண்டாம் அரையாண்டு முதல் 473 சதுரஅடி தரை தள வணிக கட்டிடம் (RCC கூரை) மற்றும் 473 சதரடி RCC முதல் தள குடியிருப்பு கட்டிடம் ஆகியவை கொண்ட ஒரு வரிவிதிப்பாக அரைவருட வரி ரூ.1224/– திருத்தி விதிக்கப்பட்டது. வரி கணக்கீடு தாள்உண்மை நகல் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.

13.04.2023 முதல் நடைமுறையிலுள்ள நகர்புற உள்ளாட்சிகளின் திருத்த சட்டம், 1998 மற்றும் அதற்கான விதிகள் 2023ன் பிரிவுகள் Chapter VIII-TAXATION பிரிவு 254 முதல் 288 வரையுள்ளதில் விதி எண்.259(e)–ல் சட்டம் பிரிவு 97–ன்படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்ட நாள் / அரையாண்டு அல்லது கட்டிடத்தில் உட்புகுந்து பயன்பாடு நாள் ஆகியவை 6 ஆண்டுகள் அல்லது 12 அரையாண்டுகள் (நடப்பு அரையாண்டினை கழிவு செய்து) வரை பின் தேதியிட்டு வரி விதிக்க தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி வரி திருத்தி விதிக்கப்பட்டது.

மேற்படி திருத்தி விதிக்கப்பட்ட வரி விதிப்பில் தளம் வாரியான பரப்பளவு பயன்பாடு ஆகியவற்றில் கீழ்கண்டவாறு கட்டிடங்கள் உள்ளது:

| தள விபரம் | மொத்த சதுர அடி | கட்டிடத்தின் தன்மை | பயன்பாடு |
|---|---|---|---|
| தரைதளம் | 528 சதுர அடி | RCC கூரை | வணிகம் |
| முதல் தளம் | 528 சதுர அடி | RCC கூரை | குடியிருப்பு |
| இரண்டாம் தளம் | 330 சதுர அடி | சிமெண்ட் ஷீட் | சிமெண்ட் ஷீட் |

மேற்படி கட்டிடத்தின் இரண்டாம் தளத்திலுள்ள சிமெண்ட் ஷீட் கூரை குடியிருப்பு கட்டிடத்திற்கு சொத்து வரி திருத்தி விதிக்கப்பட்ட 2023–2024 இரண்டாம் அரையாண்டு முதல் மீண்டும் திருத்தி விதிக்கவும், புகார் மனுதாரரால் செலுத்த வேண்டிய வரிவிதிப்புக்கான கேட்புகளில் திருத்திய சிறப்பு கேட்பு அறிவிப்பு மற்றும் வரி கணக்கீட்டுதாள் ஆகியவற்றினை சார்வு செய்து, புகார் மனுதாரரால் செலுத்த வேண்டிய நிலுவை வரியினை செலுத்திட உரிய ஆணை பிறப்பிக்க மாண்பமை உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்களை மன்றாடி கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் மற்றும் அவரது கணவர் திரு. N. சிவகுமார் ஆகியோர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"1) திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 3, வார்டு எண்.44ல் உள்ள 22 ஆண்டுகள் பழைமையான 522–3/4 சதுரடி கட்டிடம் எனது அனுபோகத்தில் உள்ளது. அதன் புதிய சொத்து வரி விதிப்பு எண்.032/044/903546, பழைய சொத்து வரி விதிப்பு எண்.032/45062493. இதற்கான சொத்துவரி எங்களால் செலுத்தப்பட்டுவருகிறது.

2) தமிழக அரசின் சொத்துவரி பொதுச்சீராய்வு உத்தரவின்படி உயர்த்தப்பட்ட ரூ.15,819/–ஐ ஆட்சேபணையுடன் சொத்து வரி செலுத்தப்பட்டது. 2018ல் தமிழக அரசு உத்தரவினை விலகி கொண்டதாலும் மீளவும் பழைய சொத்துவரியே வசூலிக்க உத்தரவு பெற்றதாலும், சொத்து வரித் தொகை ஆண்டிற்கு ரூ.870/– என 2019 முதல் 2021 வரை ஒரு ஆண்டிற்கு ரூ.1,140/– என எதிர் மனுதாரரால் உயர்த்தப்பட்டு 2018ல் செலுத்திய தொகை ரூ.15,819/–ஐ பிடித்தம் செய்து வரவு வைக்கப்பட்டது. ஆனால் அதற்கான ரசீது ஏதும் எனக்கு கொடுக்கப்படவில்லை.

3) 2025ம் ஆண்டு ஜனவரி 3ல் மண்டல வருவாய் உதவியாளர் ரூ 40,000/– வரி உயர்த்தப்பட்டுள்ளது எனவும், தெரிவிக்கப்பட்டது. ஆனால் எந்தவித அறிவிப்பும் வழங்கவில்லை.

4) வணிகப் பயன்பாட்டு கட்டிடம் உள்ள முத்துசாமி வீதியில் உள்ள 50 கட்டிடங்களின் சொத்துவரி விதிப்பில் எந்த மாற்றமும் செய்யாத நிலையில், எனது கட்டிடத்தில் கூடுதல் கட்டிடமோ அல்லது எந்த மாறுதலும் மேற்கொள்ளாத எனது பழைமையான கட்டிடத்திற்கு. 2023–24ம் இரண்டாம் அரையாண்டு சொத்து வரி ரூ.11,941/–ஐ செலுத்தாத காரணத்தினால், ரூ.500/–ம் அபராத தொகையாகவும் 2018ல் முன்பணமாக பெற்ற தொகையையும், இருப்பில் உள்ள ரூ.8,899/–ஐ வரவு வைத்து அந்த ஆண்டு நிலுவைத்தொகை ரூ.3,639/– என்பது வலைத்தளத்தின் மூலம் அறிய முடிந்தது. மேலும் 2025–2026 ஆண்டிற்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட ரூ.15,819/–லிருந்து ரூ.26,000/– சொத்து வரி ஆக நிர்ணயிருக்கப்பட்டுள்ளது. 27.05.2025ம் நாளிட்ட நடப்பு நிதியாண்டு வரை நிலுவைத்தொகை ரூ.53,545/– என திருப்பூர் மாநகராட்சி வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 1) எனது வீட்டிற்கான அளவீடுகள் முறையாக செய்யாமல் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

2) வரி விதிப்பிற்கான நோட்டீசோ அதற்கான கணக்கீட்டு படிவமோ அளிக்கப்படவில்லை.

3) தற்போது இன்றைய விசாரணையில் திருப்பூர் மாநகராட்சியின் உதவி ஆணையர் காண்பித்த கணக்கீட்டு படிவத்தில் தெரிவித்துள்ள விவரங்கள் எங்களுக்கு சரியாக புரியவில்லை.

எனவே, எனது கட்டிடத்திற்கு ஏற்கனவே ஆண்டிற்கு விதித்த சொத்து வரியான ரூ.1,140/–ஐ நிர்ணயம் செய்யுமாறு திருப்பூர் மாநகராட்சிக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.44, முத்துசாமி வீதியில் அமைந்துள்ள மனுதாரரின் கட்டிடம் தரை, முதல் தளம் மற்றும் RCC தரை பயன்பாட்டு கட்டிடமாகவும், இரண்டாம் தளத்தில் சிமெண்ட் ஷீட் கூரையுடன் கூடிய கட்டிடமாகவும், உள்ளது. இதற்கான புதிய சொத்துவரி விதிப்பு எண்.032/044/903546 பழைய வரி விதிப்பு எண்.032/45062493. அரையாண்டு வரி 2017–2018ல் அரையாண்டிற்கு ரூ.135/– ஆகும்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கையின்படி மனுதாரரின் தரை தளம், முதல் தளம் ஆகியவை முறையே வணிக பயன்பாட்டு கட்டிடமாகவும் மற்றும் குடியிருப்பு பயன்பாட்டு கட்டிடம் ஆகவும் உள்ளன இக்கட்டிடத்திற்கு, திருப்பூர் மாநகராட்சியின் அலுவலர்கள் கொண்ட ஒரு குழு ஆய்வு செய்து 29.12.2017ம் தேதியன்று திருத்தி விதிக்கப்பட்ட இரண்டு வரி விதிப்புகள் மற்றும் அதற்குண்டான வருட வாடகை மதிப்பு, பழைய வரி, திருத்தி விதிக்கப்பட்ட வரி விதிப்பின் கூரை, பயன்பாடு கட்டிடத்தின் பரப்பளவு, திருத்தி விதிக்கப்பட்ட அரைவருட வரி ஆகிய விபரங்கள் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டன :–

| புதிய வரி விதிப்பு எண். | பழைய வரி விதிப்பு எண். | வரி விதிப்பாளர் பெயர் | பழைய ஆண்டு வாடகை மதிப்பு | பழைய அரை வருட வரி | திருத்திய ஆண்டு வாடகை மதிப்பு | திருத்திய அரை வருட வரி | பயன்பாடு மற்றும் பரப்பளவு |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 032/044/ 903546 | 032/045/ 03516 | G.சாவித்திரி க/பெ.கணேசன் | 5544 | 135 | 30030 | 5278 | 650 ச.அ வணிகம் |

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 19.07.2018ம் தேதிய 73ம் எண்ணிட்ட அரசாணையின்படி 01.04.2018 முதல் பொது சொத்துவரி சீராய்வில் திருத்தி விதிக்கப்பட்ட வரி விதிப்புகள் பேரில் புகார் மனுதாரர் வரி செலுத்தி வந்தார். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 19.11.2019ம் தேதிய 150ம் எண்ணிட்ட அரசாணையில் சொத்துவரி பொது சீராய்வினை ரத்து செய்து சொத்துவரி சீராய்வுக்கு முன்னர் அரசாணையின்படி மனுதாரர் மிகையாக செலுத்தப்பட்ட தொகை அடுத்தடுத்த அரையாண்டுகளுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. மென்பொருளில் ரசீது வழங்க வடிவமைப்பு செய்யப்படாததால் ரசீது யாருக்கும் வழங்கப்படவில்லை.

01.04.2022 முதல் சொத்துவரி விதிப்பிற்கான அரையாண்டு வரியினை அனைத்து மாநகராட்சிகள், சிறப்பு வரி சீராய்வு செய்து உயர்த்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 30.03.2022ம் தேதிய 53–ம் எண்ணிட்ட அரசாணையில்

குறிப்பிடப்பட்டுள்ள Increase Factor அடிப்படையில் மனுதாரரின் கட்டிடத்திற்கு சொத்துவரி 01.04.2022 முதல் திருத்தி விதிக்கப்பட்டது.

மேலும், 13.04.2023 முதல் நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023ன் பிரிவுகள் Chapter VIII-Taxation பிரிவு 254 முதல் 288 வரையுள்ள விதி எண்.259(e)–ல் சட்டம் பிரிவு 97–ன்படி திருத்தி விதிக்கப்பட்ட வரி விதிப்பில் தளம் வாரியான பரப்பளவு பயன்பாடு கட்டிடங்கள் கீழ்கண்டவாறு உள்ளது :

| தள விபரம் | மொத்த சதுர அடி | கட்டிடத்தின் தன்மை | பயன்பாடு |
|---|---|---|---|
| தரைதளம் | 528 சதுர அடி | RCC கூரை | வணிகம் |
| முதல் தளம் | 528 சதுர அடி | RCC கூரை | குடியிருப்பு |
| இரண்டாம் தளம் | 330 சதுர அடி | சிமெண்ட் ஷீட் | சிமெண்ட் ஷீட் |

மேற்படி கட்டிடத்தில் பயன்பாட்டில் உள்ள கீழ்க்கண்ட அளவுகளின்படி 01.10.2023 முதல் அரையாண்டு வரியாக ரூ12,211/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| தள விபரம் | மொத்த சதுர அடி | கட்டிடத்தின் தன்மை | பயன்பாடு |
|---|---|---|---|
| தரைதளம் | 473 சதுர அடி | RCC கூரை | வணிகம் |
| முதல் தளம் | 473 சதுர அடி | RCC கூரை | குடியிருப்பு |

இரண்டாம் தளம் தற்காலிக கட்டிடமாக உள்ளதால் வரி விதிப்பு செய்யப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் 6 சதவீதம் உயர்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, அரசாணையின்படியும், அரசின் கொள்கை முடிவின்படியும் சரியாக வரி விதிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.''.

7. மனுதாரரின் மனு, மனுதாரர் மற்றும் அவரது கணவர் திரு. N. சிவகுமார் ஆகியோரின் வாக்குமூலம் எதிர்மனுதாரரான திருப்பூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 3, வார்டு எண்.44ல் உள்ள 22 ஆண்டுகள் பழைமையான 522–3/4 சதுரடி கட்டிடத்தின் மீது விதிக்கப்பட்ட சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், தமிழக அரசின் சொத்துவரி பொதுச்சீராய்வு உத்தரவின்படி உயர்த்தப்பட்ட ரூ.15,819/–ஐ ஆட்சேபணையுடன் சொத்து வரி செலுத்தப்பட்டது என்பதும், 2018–ல் தமிழக அரசு சொத்துவரி பொதுசீராய்வு உத்தரவினை விலக்கி கொண்டதாலும் மீளவும் பழைய சொத்துவரியே வசூலிக்க உத்தரவு பெற்றதாலும், சொத்து வரித் தொகை ஆண்டிற்கு ரூ.870/– என 2019 முதல் 2021 வரை ஒரு ஆண்டிற்கு ரூ.1,140/– என திருப்பூர் மாநகராட்சியால் உயர்த்தப்பட்டு, 2018ல் செலுத்திய தொகை ரூ.15,819/–ஐ பிடித்தம் செய்து வரவு வைக்கப்பட்டது என்பதும், அதற்கான ரசீது ஏதும் கொடுக்கப்படவில்லை என்பதும், 2025ம் ஆண்டு ஜனவரி 3ல் திருப்பூர் மாநகராட்சி மண்டல வருவாய் உதவியாளர் ரூ. 40,000/– வரி உயர்த்தப்பட்டுள்ளது என எவ்வித அறிவிப்பும் வழங்காமல் தெரிவிக்கப்பட்டது என்பதும், கூடுதல் கட்டிடமோ அல்லது எந்த மாறுதலும் மேற்கொள்ளாத தனது பழைமையான கட்டிடத்திற்கு, 2023–24ம் இரண்டாம் அரையாண்டு சொத்து வரி ரூ.11,941/–ஐ செலுத்தாத காரணத்தினால், ரூ.500/– அபராத தொகையாகவும், 2018–ல் முன்பணமாக பெற்ற தொகையையும், இருப்பில் உள்ள ரூ.8,899/–ஐ வரவு வைத்து அந்த ஆண்டு நிலுவைத்தொகை ரூ.3,639/– என்பது வலைத்தளத்தின் மூலம் மனுதாரரால் அறிய முடிந்தது என்பதும், 2025–2026 ஆம் ஆண்டிற்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட ரூ.15,819/–லிருந்து ரூ.26,000/– சொத்து வரி ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், 27.05.2025ம் நாளிட்ட நடப்பு நிதியாண்டு வரை நிலுவைத்தொகை ரூ.53,545/– என திருப்பூர் மாநகராட்சி வலைத்தளத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், தனது வீட்டிற்கான அளவீடுகள் முறையாக செய்யாமல் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், வரி விதிப்பிற்கான நோட்டீசோ அதற்கான கணக்கீட்டு படிவமோ அளிக்கப்படவில்லை என்பதும், 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் திருப்பூர் மாநகராட்சியின் உதவி ஆணையர் காண்பித்த கணக்கீட்டு படிவத்தில் தெரிவித்துள்ள விவரங்கள் சரியாக புரியவில்லை என்பதும், தங்களது கட்டிடத்திற்கு ஏற்கனவே ஆண்டிற்கு விதித்த சொத்து வரியான ரூ.1,140/—னையே நிர்ணயம் செய்யுமாறு திருப்பூர் மாநகராட்சிக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு, மனுதாரர் மற்றும் அவரது கணவர் திரு. N. சிவகுமார் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.44, முத்துசாமி வீதியில் அமைந்துள்ள மனுதாரரின் கட்டிடம் தரை, முதல் தளம் மற்றும் RCC தரை பயன்பாட்டு கட்டிடமாகவும், இரண்டாம் தளத்தில் சிமெண்ட் ஷீட் கூரையுடன் கூடிய கட்டிடமாகவும் உள்ள கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட அரையாண்டு வரி 2017—2018ல் ரூ.135/— என்பதும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையின்படி, மனுதாரரின் தரை தளம், முதல் தளம் ஆகியவை முறையே வணிக பயன்பாட்டு கட்டிடமாகவும் மற்றும் குடியிருப்பு பயன்பாட்டு கட்டிடம் ஆகவும் உள்ள இக்கட்டிடத்திற்கு, திருப்பூர் மாநகராட்சியின் அலுவலர்கள் கொண்ட ஒரு குழு ஆய்வு செய்து, அக்கட்டிடத்தின் பரப்பளவு பயன்பாட்டின் அடிப்படையில், திருத்தி விதிக்கப்பட்ட அரைவருட வரியாக ரூ.5278/— ஆகவும், அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018—ன்படி, 01.04.2018 முதல் பொது சொத்துவரி சீராய்வில் திருத்தி விதிக்கப்பட்ட வரி விதிப்புகள் பேரில் மனுதாரர் வரி செலுத்தி வந்தார் என்பதும், அரசாணை எண் 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.11.2019ன்படி சொத்துவரி பொது சீராய்வினை ரத்து செய்து சொத்துவரி சீராய்வுக்கு முன்னர் அரசாணையின்படி மனுதாரர் மிகையாக செலுத்தப்பட்ட தொகை அடுத்தடுத்த அரையாண்டுகளுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதும், மென்பொருளில் ரசீது வழங்க வடிவமைப்பு செய்யப்படாததால் ரசீது யாருக்கும் வழங்கப்படவில்லை என்பதும், 01.04.2022 முதல் சொத்துவரி விதிப்பிற்கான அரையாண்டு வரியினை அனைத்து மாநகராட்சிகள், சிறப்பு வரி சீராய்வு செய்து உயர்த்திட, அரசாணை எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.03.2022ன்படி Increase Factor அடிப்படையில் மனுதாரரின் கட்டிடத்திற்கு சொத்துவரி 01.04.2022 முதல் திருத்தி விதிக்கப்பட்டது என்பதும், 13.04.2023 முதல் நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023ன் பிரிவுகள் Chapter VIII-Taxation பிரிவு 254 முதல் 288 வரையுள்ள விதி எண்.259(e)—ல் சட்டம் பிரிவு 97—ன்படி திருத்தி விதிக்கப்பட்ட வரி விதிப்பில், மனுதாரருடைய வீட்டில், RCC கூரை கொண்ட 473 சதுரடி வணிக பயன்பாட்டில் உள்ள தரைத்தளம், RCC கூரை கொண்ட 473 சதுரடி குடியிருப்பு பயன்பாட்டில் உள்ள முதல் தளம், ஆகியவற்றின் பயன்பாட்டு பரப்பளவின்படி 01.10.2023 முதல் அரையாண்டு வரியாக ரூ12,211/— என நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதும், சிமெண்ட் ஷீட் கொண்ட இரண்டாம் தளம் தற்காலிக கட்டிடமாக உள்ளதால் வரி விதிப்பு செய்யப்படவில்லை என்பதும், ஒவ்வொரு ஆண்டும் 6 சதவீதம் உயர்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதும், அரசாணையின்படியும் மற்றும் அரசின் கொள்கை முடிவின்படியும் சரியாக வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரான திருப்பூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில் திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 44, முத்துசாமி வீதியில் அமைந்துள்ள மனுதாரரின் கட்டிடம், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையின்படி, தரை தளம், முதல் தளம் ஆகியவை முறையே வணிக பயன்பாட்டு கட்டிடமாகவும், மற்றும் குடியிருப்பு பயன்பாட்டு கட்டிடம் ஆகவும் உள்ளதற்கு, திருப்பூர் மாநகராட்சி அலுவலர்கள் கொண்ட ஒரு குழு

ஆய்வு செய்து, அக்கட்டிடத்தின் பரப்பளவு பயன்பாட்டின் அடிப்படையிலும், அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022–ன்படியும் 03.04.2023 முதல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023–ன் பிரிவுகள் Chapter VIII – Taxation விதி 254 முதல் 288 வரையுள்ள விதிகளின்படியும், விதி 259 (1 )(e)–ல் படிக்கப்பட்ட சட்டப் பிரிவு 97–ன்படி, திருத்தி விதிக்கப்பட்ட வரி விதிப்பில் மனுதாரருடைய வீட்டில் RCC கூரை கொண்ட 473 சதுர அடி வரை பயன்பாட்டில் உள்ள தரைத் தளம், RCC கூரை கொண்ட 473 சதுர அடி குடியிருப்பு பயன்பாட்டில் உள்ள முதல் தளம் ஆகியவற்றின் பயன்பாடு பரப்பளவின்படி வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், சிமெண்ட் ஷீட் கொண்ட இரண்டாம் தளம் தற்காலிக கட்டிடமாக உள்ளதாக வரிவிதிப்பு செய்யயப்படவில்லை என்றும், எதிர்மனுதாரர் சார்பில் திருப்பூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையரின் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள வரிவிதிப்பு சரியானது என்பதை உறுதி செய்திடும் பொருட்டு, மனுதாரருடைய கட்டிடத்தை அவரது முன்னிலையில், மீண்டும் முழுவதுமாக அளவீடு செய்து, உரிய அரசு விதிகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திருமதி S..ஜெயசுதா,
கதவு எண் 5/262–9,
பாலமலை நகர், நாயக்கன் பாளையம்,
பெரியநாயக்கன் பாளையம்,
கோயம்புத்தூர்–641 020

(2) ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர். 15/5/26